டிஜிட்டல் டெய்லி
அக்ரி-டாக்டர்
agridoctor.in

கல்யாண்
ஜுவல்லர்ஸ்

agridoctor.in | 30.01.2026 வெள்ளிக்கிழமை | பக்கங்கள் 30 | RNI No.TNTAM/2012/49602 | Vol.13, Issue : 183 - Madurai | Online Edition

# தமிழ்நாட்டில் உழவர் உற்பத்தியாளர் அமைப்புகளை வலுப்படுத்த உயர்நிலைக் குழு அமைப்பு

## மத்திய வேளாண் அமைச்சகம் தகவல்

புது தில்லி, ஜன.29

தமிழ்நாட்டில் உள்ள உழவர் உற்பத்தியாளர் அமைப்புகளின் செயல்பாட்டை ஆய்வு செய்து, அவற்றின் எண்ணிக்கை மற்றும் பயன்பாட்டை மேம்படுத்துவதற்கான வழிவகைகளை பரிந்துரை செய்து வலுப்படுத்த மத்திய வேளாண் அமைச்சகம் உயர் நிலைக் குழுவை அமைத்துள்ளது.

சமீபத்தில் ஈரோட்டில் சுற்றுப்பயணம் மேற்கொண்ட மத்திய வேளாண் மற்றும் விவசாயிகள் நலத்துறை அமைச்சர் சிவராஜ் சிங் சௌகான், உழவர் உற்பத்தியாளர் அமைப்புகள் எதிர் கொள்ளும் பிரச்சனைகளை கவனத்தில் கொண்டு விரிவான, கள அடிப்படையிலான மதிப்பீடுகள் மூலம் பிரச்சனைகளுக்கு உரிய நேரத்தில் தீர்வுகாண மேற்கொண்ட தலையீட்டை அடுத்து இந்த முன்முயற்சி மேற்கொள்ளப்பட்டுள்ளது.

விவசாயிகள் மற்றும் துறை சம்பந்தப்பட்டவர்களுடன் சிவராஜ் சிங் சௌகான் விவாதித்த போது, உழவர் உற்பத்தியாளர் அமைப்புகள் திர்கொள்ளும் செயல்பாடு சார்ந்த தொழில்நுட்பம் மற்றும் சந்தை பிரச்சனைகள் எடுத்துரைக்கப்பட்டன. இந்த உள்ளீடுகள் அடிப்படையில் விரைந்து செயல்பட்டு உயர்நிலைக் குழுவை அமைக்கவும், பொருத்தமான நடவடிக்கைகளை பரிந்துரை செய்யவும் அமைச்சகம் ஒப்புதல் அளித்தது.

விரிவான மற்றும் கள அடிப்படையிலான மதிப்பீட்டை உறுதி செய்வதற்காக இந்தக் குழுவில் நபார்டு வங்கி, இந்திய தேசிய

வேளாண் கூட்டுறவு சந்தைப்படுத்துதல் கூட்டமைப்பு, சிறு விவசாயிகள், வேளாண் வணிக கூட்டமைப்பின் தமிழ்நாடு பிரிவு, ஐசிஏஆர் – தேசிய வாழை ஆராய்ச்சி மையம், உழவர் உற்பத்தியாளர் அமைப்புகள் ஆகியவற்றின் பிரதிநிதிகளும் அரசு சாரா அமைப்புகளின் பிரதிநிதிகளும் மத்திய வேளாண்மை மற்றும் விவசாயிகள் நலத்துறையின் அதிகாரிகளும் இடம் பெற்றுள்ளனர்.

உழவர் உற்பத்தியாளர் அமைப்புகளின் நிர்வாகம், மேலாண்மை நடைமுறைகள், வணிகச் செயல்பாடுகள், தொழில்நுட்ப ஆதரவு, தொடர்புகள், ஒருங்கிணைப்பு, மதிப்புக் கூட்டுதல், சந்தைப்படுத்துதல், சவால்கள், திறன் கட்டமைப்பு உள்ளிட்ட விசயங்களை இந்தக் குழு ஆய்வு செய்யும்.வாழை, மஞ்சள், தென்னை, மரவள்ளிக் கிழங்கு உள்ளிட்ட தமிழ்நாட்டின் பயிர் வகைகள் மற்றும் இயற்கை வேளாண் சாகுபடி முறைகள் பற்றி இந்தக் குழு சிறப்பு கவனம் செலுத்தும். கள நிலவரத்தை கணக்கில் கொண்டு பரிந்துரைகள் செய்யப்படுவதை உறுதி செய்ய இந்தக் குழு களப் பயணங்களை மேற்கொள்வதோடு, உழவர் உற்பத்தியாளர் அமைப்புகள், அவற்றின் உறுப்பினராக உள்ள விவசாயிகள், சந்தைப்பிரிவுகள் மற்றும் இதர பங்குதாரர்களுடன் ஆலோசனை நடத்தும்.

இந்தக் குழு தனது இறுதி அறிக்கையை இரண்டு மாதங்களுக்குள் மத்திய வேளாண்மை மற்றும் விவசாயிகள் நலத் துறையிடம் சமர்ப்பிக்க வேண்டும் என்று பணிக்கப்பட்டுள்ளது. திருச்சிராப்பள்ளியில் உள்ள தேசிய வாழை ஆராய்ச்சி மையமும், ஐதராபாதில் உள்ள வேளாண் அறிவியல் மையம் ஆகியவை இந்தக் குழுவிற்கு அனைத்து வகையான உதவிகளையும் செய்யும்.




agridoctor.in the Tamil Digital daily published and edited by **M.J.Vasudevan**,
18, Chandrakanthi Nagar, Ponmeni, Bye Pass Road, Madurai - 625 016. Ph. : 4366425.

# திருப்பதிசாரம் வேளாண்மை அறிவியல் நிலையத்தில் வேளாண் மகளிருக்கான மாற்று வாழ்வாதார பயிற்சி

கன்னியாகுமரி, ஜன.27

கோவை வேளாண்மை பல்கலைக்கழகம், வேளாண் காலநிலை ஆராய்ச்சி மையம் மற்றும் திருப்பதிசாரம் வேளாண்மை அறிவியல் நிலையம் ஆகியவை இணைந்து நடத்திய வேளாண் மகளிருக்கான மாற்று வாழ்வாதாரப் பயிற்சி முகாமிற்கு வேளாண்மை அறிவியல் நிலைய பேராசிரியர் மற்றும் திட்ட ஒருங்கிணைப்பாளர் முனைவர் சா சுரேஷ், தலைமை வகித்தார். அவர் தம் தலைமை உரையில் பருவநிலை மாற்றத்திற்கான வேளாண் தொழில்நுட்பங்கள் மற்றும் மாற்று வாழ்வாதார முறைகள் குறித்து எடுத்துரைத்தார்.




வேளாண்மை இணை இயக்குனர் எம் ஆர் வாணி, தனது சிறப்புரையில் கிராமப்புற வேலை வாய்ப்புகள் மற்றும் சந்தைப் படுத்துதல் குறித்து விவரித்தார். அறுவடை பின்சார் தொழில் நுட்பங்கள் மற்றும் விளைபொருட்கள் மதிப்பு கூட்டல் குறித்து முனைவர் ஜெ செல்வி, உதவி பேராசிரியர் (உணவியல் மற்றும் சத்தியல்), விளக்கமாக எடுத்துரைத்தார். சந்தைப்படுத்துதல் மற்றும் ஏற்றுமதி மற்றும் நிதி உதவி குறித்து முனைவர் கு கவிதா, இணை பேராசிரியர் (பயிர் நோயியல்) எடுத்துரைத்தார்.

இந்த பயிற்சி முகாமில் அறுவடை பின்சார் தொழில்நுட்ப பயிற்சி கையேடு வெளியிடப்பட்டது. மேலும் மதிப்பு கூட்டப்பட்ட பொருட்கள் தயாரிக்க எண்ணெய் பிரித்தெடுக்கும் இயந்திரம் மற்றும் உலர் தானியங்கள் அரவை இயந்திரம் ஆகியவற்றின் செயல்முறை விளக்கம் நடைபெற்றது. இந்நிகழ்வில் கன்னியாகுமரி மாவட்டத்தின் ஐந்து வட்டாரங்களை சேர்ந்த 50 வேளாண் மகளிர் கலந்து கொண்டு பயன் அடைந்தனர். இந்நிகழ்வில் முனைவர் சா நஸ்ரின் ஹசன், இணை பேராசிரியர் (வேளாண் விரிவாக்கம்) நன்றியுரை கூறினார்.

அக்ரி-டாக்டர்.காம் பொறுப்புத்துறப்பு (Disclaimer): இந்த மின்னிதழில் வரும் விளம்பரங்களின் உண்மைத் தன்மைக்கு நாளிதழ் பொறுப்பேற்காது. இதன் உரிமையாளரோ, வெளியீட்டு நிறுவனமோ, வெளியீட்டாளரே, ஆசிரியரோ, மற்ற ஊழியர்களோ எந்த வகையிலும் விளம்பரங்களின் உண்மைத் தன்மைக்கு பொறுப்பானவர்கள் அல்ல. வாசகர்கள் தாங்களே ஆய்ந்து அறிந்து சுய விருப்பு அடிப்படையில் தீர்மானிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். விளம்பரதாரர்கள், நிறுவனங்களின் பொருட்கள், சேவைகள் போன்றவை குறித்த செய்திகளுக்கும் மேற்கண்ட பொறுப்புத் துறப்பு பொருந்தும் என்பதையும் அறியவும்.

அக்ரி-டாக்டர்
agridoctor.in Agri Digital daily

KALYAN
JEWELLERS

# எல்லா நாளும் தள்ளுபடி உண்டு உங்களுக்கு மட்டும்

சிறப்புச்சலுகை



கல்யாண் ஜுவல்லர்ஸ்-ல் நகை எடுக்க வரும்போது **அக்ரி டாக்டர் வாசகர்** என்று அறிமுகப் படுத்திக் கொண்டு சிறப்பான சேவையையும், பிரத்யேக தள்ளுபடியும் பெறுங்கள். இந்த தள்ளுபடி உங்களுக்கு மட்டுமே அதுவும் எல்லா நாட்களிலும்.

குறிப்பு: அதிகார பூர்வமாக கல்யாண் ஜுவல்லர்ஸ் தள்ளுபடி அறிவிக்கும் நாட்களில் அந்த தள்ளுபடி மட்டும் செல்லுபடியாகும்.மேலும் உதவி தேவை எனில் கடையில் இருந்தே எங்களை தொடர்பு கொள்ளுங்கள்.

96331 42000, 86104 71220. 73558 87778, 99408 27084, 80563 05483

# பால் தொழில் நிறுவனத்தை பார்வையிட்ட வேளாண்மை கல்லூரி மாணவர்கள்



திருவண்ணாமலை ஜன.29

திருவண்ணாமலை மாவட்டம், வாழவச் சனூர் வேளாண்மை கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தைச் சேர்ந்த மாண வர்கள் கீழ்நெல்லி கிராமத்தில் தங்கி பயிற்சி பெற்று வருகின்றனர். இப்பயிற்சி யின் ஒரு பகுதியாக கீழ்நெல்லியில் செயல்பட்டு வரும் பால்தொழில் நிறுவனத்தை பார்வையிட்டனர். இந்தப் பயணத்தின் போது, பால் சேகரிப்பு மையத்தின் செயல் பாடு, பால் தரப் பரிசோதனை முறைகள், குளிரூட்டல் மற்றும் சேமிப்பு வசதிகள், மதிப்பூட்டப்பட்ட பால் பொருட்கள் தயாரிப்பு நடைமுறைகள் குறித்து மாணவர் களுக்கு விரிவாக விளக்கப்பட்டது.

மேலும், பால்தொழில் துறையில் சுத்தம், தரநிலைகள் மற்றும் உணவு பாதுகாப்பு விதிமுறைகள் பின்பற்றப்பட வேண்டிய அவசியம் குறித்தும் தொழில்நுட்ப நிபுணர்கள் எடுத்துரைத்தனர். இப்பயணம் மாணவர்களுக்கு பால்தொழில் துறையில் நடைமுறை அறிவை மேம்படுத்துவதுடன், தொழில் வாய்ப்புகள் மற்றும் தொழில் முனைவு சாத்தியங்கள் குறித்த விழிப்புணர்வையும் ஏற்படுத்தியது.

# சேமிப்பின் போது வெங்காயத்தில் முளைப்பை தடுப்பது குறித்து விளக்கமளித்த வேளாண் கல்லூரி மாணவர்



மதுரை, ஜன.29

தமிழ்நாடு வேளாண்மை பல்கலைகழகம், மதுரை வேளாண்மை கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தில் இளங்கலை பட்டம் பயிலும் 4ம் ஆண்டு மாணவர் ரா.சிலுவை ஜெனா ஊரக வேளாண் பணி அனுபவ திட்டத்தின் கீழ் திண்டுக்கல் மாவட்டம், ஒட்டன்சத்திரம் குழுவில் பயிற்சி பெற்று வருகிறார். இதன் ஒரு பகுதியாக, ஒட்டன் சத்திரம், வீரலப்பட்டி கிராமத்தில், வெங்காயத்தில் சேமிப்பின் போது முளைப்பதை தடுப்பது எப்படி என விளக்கம் கொடுத்தார். இதில் அறுவடைக்கு 15 நாட்களுக்கு முன் மாலிக் ஹைட்ரசைட் (maleic hyd razide) 2.5g/l என்றளவில் தெளிக்க வேண்டும். இது வெங்காயத் தில் முளைப்பை தடுப்பதுடன், வெங்காயத்தின் தரத்தையும் பாது காக்கிறது என விளக்கினார். விவசாயிகள் பலர் கலந்து கொண்டனர்.

அக்ரி-டாக்டர்
agridoctor.in Agri Digital daily





**அன்புடையீர்,**

நமது 'அக்ரி டாக்டர்' மின்னிதழ் கடந்த 13 ஆண்டுகளாக மின் நாளிதழ் வடிவில் லட்சக்கணக்கான விவசாயிகள், வேளாண் துறை மாணவர்கள் ஆகியோருக்குத் தேவையான தகவல்களை செய்தி வடிவிலும், கட்டுரை வடிவிலும் வழங்கி வருகிறது. இதனால் பலனடைந்தோர் ஏராளம்.

வேளாண் துறை அதிகாரிகள், வேளாண் துறை வல்லுநர்கள், வேளாண் பல்கலைக்கழகப் பேராசிரியர்கள், மத்திய, மாநில அரசுத் துறை அதிகாரிகள் ஆகியோர் விவசாயிகள், மாணவர்கள் பயனடையும் வகையில், பல்வேறு தகவல்களை செய்தி வடிவிலும் கட்டுரை வடிவிலும் அளித்து வருகின்றனர்.

இத் தருணத்தில், நமது 'அக்ரி டாக்டர்' மின்னிதழ், நூல் வடிவில் ஆண்டு மலரை வெளியிட முடிவு செய்துள்ளது. இந்த மலர் விரைவில் வெளியாகவிருக்கிறது. இந்த ஆண்டு மலரில் விவசாயம் தொடர்பான ஏராளமான கட்டுரைகள், விவசாயிகளின் அனுபவங்கள், வெற்றிக் கதைகள், சந்தித்த பிரச்சினைகள் உள்ளிட்டவை இடம்பெறவுள்ளன.

இந்த ஆண்டு மலர் வேளாண் துறை சார்ந்த மாணவர்களுக்கு பெரிதும் உதவியாக இருக்கும் என்பதில் ஐயமில்லை. எனவே, இந்த ஆண்டு மலரை வாங்கி பயனடையுமாறு மாணவர்களுக்குப் பரிந்துரை செய்யும்படி தங்களை பணிவன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

மேலும், இந்த மலர் ஆயிரக்கணக்கான விவசாயிகளைச் சென்றடையவுள்ளதால், தங்களது கல்லூரி / நிறுவனங்கள் தொடர்பான விளம்பரங்களை இந்த மலரில் அளித்து உதவும்படி கேட்டுக் கொள்கிறேன்.

தங்கள்
உண்மையுள்ள

ஆசிரியர் & வெளியீட்டாளர்
எம்.ஜெ.வாசுதேவன்

நன்றி

தொடர்புக்கு
+91 80563 05483
+91 9344811812

# ஊரக பங்கேற்பு மதிப்பீடு செய்த வேளாண் கல்லூரி மாணவிகள்

நாமக்கல், ஜன.29

நாமக்கல் பிஜிபி வேளாண்மை அறிவியல் கல்லூரியில் நான்காம் ஆண்டு பயிலும் மாணவிகள் தங்களது இறுதி ஆண்டு பாடத்திட்டமான கிராமத்தில் தங்கி வேளாண் பயிற்சி பெறும் திட்டத்தின் கீழ் பிள்ளூர் கிராமத்தில் பங்கேற்பு கிராம மதிப்பீட்டு (Participatory Rural Appraisal - PRA) பயிற்சி சிறப்பாக நடத்தப்பட்டது. இந்த பயிற்சியில் கிராம மக்கள், விவசாயிகள், பெண்கள் மற்றும் இளைஞர்கள் ஆர்வமுடன் கலந்து கொண்டு தங்களின் கிராம வளர்ச்சிக்கான கருத்துகளை பகிர்ந்து கொண்டனர்.



பயிற்சியின் ஒரு பகுதியாக பிரச்சனை மரம் உருவாக்கப்பட்டு, கிராமத்தில் உள்ள முக்கியமான சமூக, பொருளாதார மற்றும் விவசாயப் பிரச்சனைகள், அவற்றின் காரணங்கள், விளைவுகள் குறித்து விவாதிக்கப்பட்டது. மேலும், சமூக வரைபடம் மூலம் வீடுகள், பொதுச் சொத்துகள், சாலைகள், குடிநீர் வசதிகள் உள்ளிட்ட விவரங்கள் குறிக்கப்பட்டன. அதேபோல், பயிர் நாட்காட்டி தயாரிக்கப்பட்டு, பருவக்கால பயிர்கள், விதைப்பு மற்றும் அறுவடை காலங்கள், மழை நிலை, வேலைவாய்ப்பு காலங்கள் குறித்து பகுப்பாய்வு செய்யப்பட்டது. கிராம மக்களின் பொருளாதார நிலையை அறியும் வகையில் செல்வ நிலை வரிசைப்படுத்தல் செயல்பாடும் மேற்கொள்ளப் பட்டது.

இந்த PRA பயிற்சி மூலம் கிராம மக்களின் நேரடி பங்கேற்புடன் பிரச்சனைகள் அடையாளம் காணப்பட்டு, எதிர்கால வளர்ச்சி திட்டங்களை திட்டமிட உதவியாக இருந்தது. கிராமத்தின் நிலைத்த வளர்ச்சிக்கு இந்த பயிற்சி முக்கியமானதாக அமைந்தது என பங்கேற்பாளர்கள் தெரிவித்தனர்.

# வீட்டு தோட்டம் குறித்து விவசாயிகளுக்கு பயிற்சியளித்த வேளாண் கல்லூரி மாணவிகள்

கிருஷ்ணகிரி, ஜன.29

கிருஷ்ணகிரி மாவட்டம், சூளகிரி வட்டார வேளாண்மை உதவி இயக்குநர் அலுவலகத்தில் அதியமான் வேளாண்மை மற்றும் ஆராய்ச்சி கல்லூரியின் சார்பாக வேளாண்மை உதவி இயக்குநர் பன்னீர் செல்வம் தலைமையில் 12 பேர் (சிந்துஜா ஸ்ரீ,








சௌந்தரி ச, ஸ்ரீ நதி ஏ, ஸ்டெப்ரினா சு, சுப ஸ்ரீ மு சி, சுவேதா ந,சுவாதி பிரியா மு, சுவேதா கோ தா, தமிழரசி த, திரி–சா கு, வைஷ்ணவி கி, வான்மதி த) கொண்ட இளமறிவியல் 4ம் ஆண்டு மாணவிகள் குழு ஊரக வேளாண்மை மற்றும் பயிற்சி திட்டத்தின் கீழ் நியமிக்கப் பட்டுள்ளனர்.

சூளகிரி வட்டாரத்தில் உள்ள கிராமங்களுக்குச் சென்று அங்கு உள்ள விவசாயிகளிடம் உரை யாடவும், அவர்கள் பின்பற்றும் பாரம்பரிய மற்றும் தொழில்நுட்ப விவசாய செயல்முறை மற்றும் பயிர் திட்டங்களை மாணவி களுக்கு எடுத்துரைத்தார். மேலும், மாணவிகள் கல்லூரியில் கற்றறிந்த நவீன தொழில்நுட்பங்கள் மற்றும் நவீன விவசாய இயந்திரங்களைப் பற்றி எடுத்துரைத்து செயல்முறை விளக்கங் களையும் விவசாயிகளுக்கு செய்து காண்பிக்க உள்ளனர். அதன் ஒரு பகுதியாக, சூளகிரி வட்டத்தில் உள்ள சாமானப்பள்ளி கிராமத்தில், கிச்சன் கார்டன் (வீட்டு காய்கறித் தோட்டம்) என்பது வீட்டின் அருகிலேயே அல்லது மாடி, தோட்டம் போன்ற குறைந்த இடங்களில் காய்கறிகளை வளர்ப்பது ஆகும். இதன் மூலம் ரசாயன உரங்கள் மற்றும் பூச்சிக்கொல்லிகள் இல்லாத புதிய, சுத்தமான காய்கறிகளை தினமும் பெற முடியும். சந்தைக்கு செல்லும் செலவு குறைந்து குடும்பத்திற்கு பணச் சேமிப்பு கிடைக்கிறது. வீட்டில் விளையும் காய்கறிகள் சத்தானதாக இருப்பதால் உடல் நலம் மேம்பட்டு நோய் எதிர்ப்பு சக்தி அதிகரிக்கிறது. சமையல் கழிவுகளை உரமாக பயன்படுத்துவ தால் சுற்றுச்சூழல் பாதுகாக்கப்படுகிறது.

மேலும், செடிகளை வளர்ப்பது மனஅழுத்தத்தை குறைத்து மன அமைதியை தருகிறது. குழந்தைகள் இயற்கை மற்றும் விவசாயம் குறித்து அறிந்து நல்ல பழக்கங்களை வளர்த்துக் கொள்கிறார்கள். இவ்வாறு கிச்சன் கார்டன் ஆரோக்கியம், பொருளாதாரம் மற்றும் சுற்றுச்சூழல் ஆகிய மூன்றுக்கும் பயனுள்ளதாக உள்ளது என்று மாணவிகள் பயிற்சி மூலம் எடுத்துரைத்தனர்.

Rithvik Pipe

# 25 ஆண்டுகள் உத்தரவாதத்துடன் கிடைக்கும் ரித்விக் PVC பைப்புகள்




## பைப் மட்டும் வாங்காமல் நிம்மதியையும் சேர்த்து வாங்குங்கள்

- **25 ஆண்டுகள் உத்தரவாதம்**
  நம்பிக்கைக்கு அடையாளம்
- **100% LEAD-FREE பைப்புகள்**
  ஆரோக்கியமான தண்ணீர், ஆரோக்கியமான வாழ்க்கை
- **ISI சான்று பெற்ற பைப்புகள்**
  தரத்திற்க்கு ஒரே அடையாளம்
- **ISI பைப்புகள் மட்டும் தயாரிக்கும்**
  நிறுவனம்–தரத்தின் தனிப்பெரும் அடையாளம்
- **67 GRADE மூலப்பொருட்கள்**
  அதிக வலிமை, நீண்ட ஆயுள்
- **TEST CERTIFICATE – QR CODE மூலமாக**
  ஒவ்வொரு பைப்பிலும் நேரடியாக பதிவிறக்கம் செய்துகொள்ளலாம்
- **FREE ON-SITE TESTING**
  விற்பனைக்கு பின் தரம் உங்கள் கண்முன்னே
- **சரியான எடை, தடிமன்**
  ஏமாற்றமில்லா தயாரிப்பு

## PRODUCT RANGES

| ISI PVC PIPE - | ASTM UPVC PIPE - | ISI CONDUIT PIPE - | ISI PLUMBING PIPE - | ISI BOREWELL CASING PIPE - |
|---|---|---|---|---|
| 20mm to 250mm (All Classes) | 21mm to 114mm (SCH 40, SCH80) | 16mm to 63mm (Light, Medium, Heavy) | 25mm to 50mm (15KG) | 125mm to 250mm |

PVC PIPE / UPVC PIPE / CONDUIT PIPE / CPVC PIPE / SOLVENTS / PVC FITTINGS
LATERAL HOSE / GARDEN HOSE / SUCTION HOSE / WATER TANK

## RITHVIK PIPES PROUDLY TRUSTED BY

LMW isha

Office
**Rithvik Pipe Company**, Kannaki Street, Mahalingapuram, Pollachi, Coimbatore Dist - 642002
E-mail : sales@rithvikpipes.com
Website : rithvikpipe.com

POWERGRID BHEL

Factory
**Rithvik Pipe Company**, Opp Kamaraj Colony, R.V.P Pudur, Palakkad Dist - 678555
E-mail : rithvikpipe@gmail.com
Website : rithvikpipe.com

**For Dealership & Projects Enquiries - 96458 77721, 96458 77741**

# திரவ உயிர் உரம் பயன்பாட்டின் மூலம் நெல் விதை நேர்த்தி செயல்முறை விளக்கமளித்த வேளாண் கல்லூரி மாணவிகள்

சிவகங்கை, ஜன.29



சிவகங்கை மாவட்டம், வேளாண் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம், செட்டிநாடு இறுதியாண்டு மாணவிகள் பிரீத்திகா, மேகலா, நந்திகா தேவி, மகாலெட்சுமி, கிருஷ்ணவேணி, கோகுலவாணி, கா.பிரியதர்ஷினி, பா.பிரித்திகா, நா.பிரியதர்ஷினி, பிரகதீஸ்வரி, நந்தனா, ஆகி யோரின் ஊரக வேளாண் அனுபவ பயிற்சியின் ஒரு பகுதியாக தேவகோட்டை வட்டம், முப்பையூர் கிராமத்திலுள்ள விவசாயிகள் நாகநாதன், மாணிக்கம், ரவிசந்திரன் மற்றும் கருப்பையா ஆகியோருக்கு அசோஸ்பைரில்லம் (திரவ உயிர் உரம்) பயன்பாட்டின் மூலம் நெல் விதை நேர்த்தி செய்வதை பற்றிய செயல்முறை விளக்கத்தை கிருஷ்ணவேணி, நா.பிரிய தர்ஷினி ஆகியோர் அளித்தனர்.

இதன் மூலம் மண்ணில் நுண்ணுயிர்களின் எண்ணிக்கை அதிகரித்து மண்வளம் பாதுகாத்து அதிக மகசூல் கிடைக்கிறது மற்றும் ரசாயன உரங்களின் இறக்குமதியும், பயன்பாடும் குறை கிறது. மேலும் விவசாயிகளின் சந்தேகங்களுக்கு விளக்கம் அளித்தனர்.

# மண் மாதிரி சேகரிப்பு குறித்து விவசாயிகளுக்கு வேளாண் மாணவர்கள் பயிற்சி

திருவள்ளூர், ஜன.29

சரியான மண் மாதிரி – சிறந்த மகசூலின் முதல் படி, என்ற கருத்துடன், கீழ்வேளூர் வேளாண்மை கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தின் இறுதியாண்டு வேளாண் மாணவர்கள் சங்கர் மு, பா மணிகண்டன், பிரியதர்ன் சி, கிர்த்திக் ரா, ஹரி பிரசாந்த் ந,அரவிந்த் த, பரணிதரன் செ, ர மணிகண்டன் ஆகியோர் மணக்குடி கிராமத்தில் மண் மாதிரி சேகரிப்பு குறித்து செய்முறை விளக்கம் அளித்தனர்.



மண் மாதிரியை எடுக்கும் சரியான முறை, பரிசோதனைக்கு அனுப்பும் நடைமுறைகள் மற்றும் பரிசோதனை அறிக்கையின் அடிப்படையில் உரங்களை துல்லியமாக பயன்படுத்தி அதிக மகசூல் பெறுவது குறித்து விவசாயிகளுக்கு தெளிவான விளக்கம் அளிக்கப்பட்டது.

அறிவியல் முறையிலான வேளாண்மையை கிராம மக்களிடம் கொண்டு சேர்க்கும் இந்த நிகழ்ச்சி, விவசாயிகளிடையே புதிய நம்பிக்கையையும் ஆர்வத்தையும் உருவாக்கியது.




# ஆடு வளர்ப்புக்கு உதவிடும் முருங்கை இலை தீவனம் எப்படி?



கிராமப்புறங்களில் கூட இன்று ஆடு வளர்ப்பது சவாலாக இருப்பதற்கு காரணம் பச்சை தீவனம் தான். முன்பெல்லாம் ஆடுகளை மேய்ச்சலுக்கு காலை முதல் மாலை வரை அனுப்பி இரவில் ஏதேனும் கடலைக் கொடி, உளுந்தம் பொட்டு வைப்பார்கள். இன்றைய காலகட்டத்தில் ஆடு களை கொட்டில் அமைத்து வளர்க்க கூடிய சூழ்நிலை தான் அதிகமாக உள்ளது. மேய்ச்சலுக்கு வாய்ப்பு இல்லாத காரணத்தால் அதிக காசு செலவழித்து பசுந்தீவனம் வாங் காமல் ஆடு வளர்ப்பதை சிலர் கைவிட்டனர். அந்த மாதிரியான இடங்களில் வேப்பம் மரம், முருங்கை, மஞ்சணத்தி செடிகளின் இலைகளை உணவாக கொடுக்கலாம்.

## முருங்கை மரம்

வறட்சியான பகுதியில் கூட எளிதாக வளரக்கூடியது முருங்கை தான். வெட்டிய உடன் மீண்டும் வேகமாக துளிர்க்க கூடிய மரம் முருங்கை தான். மற்ற புல் வகைகளுடன் ஒப்பிடும் போது எவர் கிரின்னாக இருப்பது முருங்கை இலை. முருங்கை விதை அல்லது போத்து (கட்டை) யை வைத்தாலே வளரக் கூடியது. நிலத்தின் வரப்புகளில் நட்டால் செங்குத்தாக வளரும். இதனால் மற்ற சாகுபடி பயிர்களுக்கு பாதிப்பு இல்லாத ஒரு மரம் தான் முருங்கை.

## முருங்கையின் முக்கியத்துவம் என்ன?

முருங்கை இலைகளில் 20-25% வரை புரத சத்து உள்ளது. இது ஆடுகளின் உடல் வளர்ச்சி, பால் உற்பத்தி இனப் பெருக்க ஆரோக்கியத்திற்கு அவசியமானது. இது எளிதாக செரிமான மாக கூடிய பசுந்தீவனம். இதை தவிர சுண்ணாம்பு, இரும்பு, பொட்டாசியம் உள்ளிட்ட பிற கனிமங்களும் நிறைந்துள்ளன.

முருங்கை இலையை பசுந்தீவனமாகவோ அல்லது உலர்த்திய இலைகளாகவோ முருங்கையைத் தொடர்ந்து உணவில் சேர்த்தால், ஆடுகளின் எடை அதிகரிப்பு, நோய் எதிர்ப்பு சக்தி இனப் பெருக்க திறன் ஆகியவை மேம்படு கின்றன. முருங்கை இலை எளிதாக குறைந்த விலையில் கிடைக்க கூடிய தரமான பசுந்தீவனமாகும்.

ஆண்டு முழுவதுமாக கிடைக்க கூடிய நம்பகமான, குறைந்த செலவிலான தீவனமாக விளங்குவதால், விலையுர்ந்த தீவனங்களுக்கு மாற்றாக பயன்படுத்தலாம் என பல சாதகமான அம்சங்கள் இருக்கின்றன. ஆகவே ஆடு வளர்ப்பு தொழிலில் ஆர்வமுள்ளவர்கள் முதலில் முருங்கை மரங் களை வளருங்கள். அதற்கு பின் ஆடு வளர்க்க ஆரம்பியுங்க.

தகவல் : **அக்ரி சு.சந்திரசேகரன், வேளாண் ஆலோசகர், அருப்புக்கோட்டை. 94435 70289.**

# டிஜிட்டல் பயிர் கணக்கெடுப்பில் வேளாண் கல்லூரி மாணவர்கள்



நாமக்கல், ஜன.29

பிஜிபி வேளாண் கல்லூரி மாணவர்கள் நாமக்கல் மாவட்டம், எலச்சிபாளையம் ஒன்றியத்திலுள்ள கொன்னையார் கிராமத்தில் வேளாண் உதவி இயக்குநர் ஜெயமாலா வழிகாட்டலின் படி உதவி வேளாண் அலுவலர் வெற்றிவேல் உடன் இணைந்து டிஜிட்டல் பயிர் கணக்கெடுப்பு திட்டம் குறித்து களத்தில் நேரடியாக அறிந்து கொள்ளும் வகையில் விவசாய நிலங்களைப் பார்வையிட்டனர். அப்போது, மொபைல் செயலி மூலம் பயிர்களின் வகை, பரப்பளவு, வளர்ச்சி நிலை, விதைப்பு காலம் போன்ற விவரங்களை பதிவேற்றும் முறைகள் விளக்கப்பட்டன. மேலும், தொழில்நுட்பம், செயற்கைக்கோள் தரவுகள் மற்றும் புகைப்பட ஆதாரங்கள் மூலம் பயிர் கணக்கெடுப்பு மேற்கொள்ளப்படுவதன் முக்கியத்துவம் குறித்து அதிகாரிகள் விளக்கினர். இக்கணக்கெடுப்பு மூலம் அரசு திட்டங்கள், பயிர் காப்பீடு மற்றும் மானியங்கள் விவசாயிகளுக்கு துல்லியமாக சென்றடைவதன் அவசியத்தையும் மாணவர்கள் புரிந்து கொண்டனர்.

# கிராம தங்கல் திட்ட பயிற்சி துவக்க விழா





கடலூர், ஜன.29

கடலூர் மாவட்டம், கீரப்பாளையம் வட்டம், வடஹரிராஜபுரம் கிராமத்தில் 19.12.25 அன்று சிதம்பரம் அண்ணாமலைப் பல்கலைக்கழக வேளாண் கல்லூரி இறுதி ஆண்டு வேளாண் புலம் மாணவிகள் கிராமத்தில் தங்கி பயிற்சி பெறும் திட்டம் (RAWE) துவக்க விழா, வடஹரிராஜபுரம் கிராமத்தில் சிறப்பாக நடைபெற்றது.

இவ்விழா Dr. P.சண்முகராஜா, தலைமையில் சிறப்பாக நடைபெற்றது. இவ்விழாவில் முன்னாள் ஊராட்சி மன்றத் தலைவர் வசந்தி மற்றும் கிராம நிர்வாக அலுவலர் ரவி ஆகியோர் கலந்துக் கொண்டு விழாவைத் தொடங்கி வைத்தனர். மேலும், அப்பகுதி விவசாயிகள் மற்றும் பொதுமக்கள் பெருந் திரளாக கலந்துக் கொண்டு விழாவை சிறப்பித்தனர்.

இப்பயிற்சி முகாமில் (குழு-5) மாணவிகள் தாரணிபிரியா.கு, தரணியா.ச, தர்ஷினி.ப, தேசிஹா.செ, தேவிகா.ரா, திவ்ய பாரதி.ஆ, திவ்ய பாரதி. செ, திவ்யா லெட்சுமி.செ, திவ்ய ஸ்ரீ.ச, திவ்வியா ஸ்ரீ.ப.வி, திவ்யா.ஞா மற்றும் திவ்யா.பூ ஆகியோர் பங்கேற்றனர். மாணவிகள் கிராமத்தில் தங்கி, விவசாயி களிடமிருந்து அவர்களின் வேளாண் நடைமுறைகள் குறித்த அனுபவங்களை நேரடியாகக் கற்றுக்கொண்டு, அவற்றை தங்களின் பயிற்சியில் பின்பற்றுவதாக உறுதியளித்தனர்.


கல்யாண்
ஜுவல்லர்ஸ்
Toll Free No. 1800 - 4257333

# வெங்காயத்தில் இலைப்பேன் தாக்கத்தின் தடுப்பு முறையைப் பற்றி விளக்கமளித்த வேளாண் கல்லூரி மாணவி



வெங்காயம் தமிழ்நாட்டின் முக்கிய வர்த்தக பயிர்களில் ஒன்றாகும். இந்த பயிரில் அதிக அளவில் பாதிப்பை ஏற்படுத்தும் முக்கிய பூச்சிகளில் இலைப் பேன் (Thrips tabaci) முதன்மை யானது. இலைப்பேன் தாக்கம் அதிகரித்தால் விளைச்சல் குறைந்து, விவசாயிகளுக்கு பெரும் இழப்பு ஏற்படும். இவை வெங்காயத்தின் மகசூலை 30% முதல் 40% வரை குறைக்ககூடியவை.

**இலைப்பேன் என்றால் என்ன?**

இலைப்பேன் என்பது மிகச் சிறிய, நீளமான உடலமைப்பைக் கொண்ட உறிஞ்சிப் பூச்சியாகும். இது வெங்காய இலைகளில் இருந்து சாறு உறிஞ்சி உணவாகக் கொள்கிறது.

**இலைப்பேன் தாக்கத்திற்கு ஏற்ற சூழ்நிலை**

வறட்சியான வானிலை, அதிக வெப்பநிலை, குறைந்த மழைப் பொழிவு, நெருக்கமான நடவு, அதிக நைட்ரஜன் உரம் பயன் படுத்துவது.

**தாக்கத்தின் அறிகுறிகள்**

வெள்ளி நிறத் திட்டுகள், பூச்சிகள் இலைகளின் சாற்றை உறிஞ்சுவதால், இலைகளின் மேற்பரப்பில் வெள்ளி நிற கோடுகள் / புள்ளிகள் தோன்றுதல்.

**நுனி கருகல்**

தாக்குதல் தீவிரம் அடையும் போது, இலைகள் நுனியிலிருந்து கீழ்நோக்கி காயத் தொடங்கும்.

**இலை சுருக்கம்**

இலைகள் வளைந்து அல்லது சுருங்கி அதன் வளர்ச்சி பாதிக்கப் படும்.

**குறைந்த மகசூல்**

ஒளிச்சேர்க்கை பாதிக்கப்படுவதால், வெங்காயக் குமிழ்கள் (Bulb) சிறியதாக மாறும், கடுமையான தாக்கத்தில் முழு செடியும் உலர்ந்து போகும்.

**தாக்கத்தால் ஏற்படும் பாதிப்புகள்**

இலைப்பேன் 30-50% வரை விளைச்சல் இழப்பு ஏற்படும், கிழங்கின் தரம் குறைதல், சந்தை மதிப்பு குறைதல், வைரஸ் நோய்கள் பரவ வாய்ப்பு உண்டாகும்.

**இலைப்பேன் மேலாண்மை முறைகள்**

**1. இயற்கை மற்றும் கலாச்சார முறைகள்**

**வரப்பு பயிர் :** இலைப்பேன் நுழைவைத் தடுக்க வயலைச்சுற்றி சோளம் அல்லது மக்காச்சோளம் போன்ற பயிர்களை வளர்ப்பு பயிராக வளர்க்கலாம்.

**நீர்ப்பாசனம் :** தூவல் நீர்ப்பாசனம் (sprinkler irrigation) செய்வதன் மூலம் பூச்சிகளின் எண்ணிக்கையைக் குறைக்க முடியும்.

**கட்டுப்பாடு :** தானியப் பயிர்களுக்கு அருகில் வெங்காயம் நடுவதை தவிர்க்க வேண்டும், ஏனெனில் அறுவடைக்குப் பின் அங்கிருந்து இலைப்பேன் இடம்பெயரும், அதிக நைட்ரஜன் உரம் தவிர்த்தல், பயிர் எச்சங்களை அகற்றுதல், பயிர் சுழற்சி பின்பற்றுதல்.

**2. இயற்கை மற்றும் உயிரியல் முறைகள்**

வேப்ப எண்ணெய் 3–5 மில்லி / லிட்டர் நீர் தெளித்தல், வேப்பம் விதை கரைசல் (NSKE 5%) பயன்பாடு, பச்சை கன்னி பூச்சிகள் (Lady bird beetle, Lacewing) பாதுகாத்தல்,

**3. இயற்கை கரைசல்கள்**

பூண்டு + மிளகாய் சாறு தெளித்தல், பஞ்சகவ்யா 3% தெளிப்பு (செடியின் சக்தி அதிகரிக்கும்).

**4. வேதியியல் கட்டுப்பாடு (தேவைப்பட்டால் மட்டும்)**


Spinosad, Emamectin benzoate, Fipronil.

● ஒரே மருந்தை தொடர்ந்து பயன்படுத்த வேண்டாம். மருந்து மாற்றி மாற்றி பயன்படுத்த வேண்டும்.

முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள், மாலை நேரத்தில் தெளிப்பு செய்தல், தெளிக்கும் போது பாதுகாப்பு உபகரணங்கள் அணிதல் வேண்டும்,

பரிந்துரைக்கப்பட்ட அளவிற்கு மட்டுமே மருந்து பயன்படுத்துதல்.

**5. இயற்பியல் முறை**



நீல நிற ஒட்டும் பொறிகள் : 1 எக்டருக்கு 15 முதல் 20 என்ற அளவில் நீல நிற ஒட்டும் பொறிகளை வைத்து பூச்சிகளைக் கவர்ந்து அழிக்கலாம்.வெங்காயத்தில் இலைப்பேன் தாக்கத்திற்கு சரியான மேலாண்மை முறைகள் பின்பற்றப்படாவிட்டால் பெரும் விளைச்சல் இழப்பை ஏற்படுத்தும். பயிர் மேலாண்மை, இயற்கை மற்றும் தேவையான அளவில் வேதியியல் முறைகளை ஒருங்கிணைத்து பின்பற்றினால் இலைப் பேன் தாக்கத்தை வெற்றிகரமாக கட்டுப்படுத்தலாம்.

மேலும் விவரங்களுக்கு **கா.வெண்முகில், இளங்கலை வேளாண் மாணவி மற்றும் முனைவர் பா.குணா, இணைப் பேராசிரியர், வேளாண் விரிவாக்க துறை, M.ஆர்த்தி, S.பூர்ணிமா, உதவி பேராசிரியர்கள் மற்றும் குழு மேற்பார்வையாளர்கள், நாளந்தா வேளாண்மை கல்லூரி, எம்.ஆர்.பாளையம், திருச்சி. மின்னஞ்சல் : baluguna 8789@gmail.com, தொலைபேசி எண் : 99446 41459** ஆகியோரை தொடர்பு கொள்ளலாம்.

# இயற்கை விவசாயம் செய்யும் விவசாயியுடன் கலந்துரையாடிய வேளாண் கல்லூரி மாணவிகள்



நாமக்கல், ஜன.29

நாமக்கல் பிஜிபி வேளாண்மை அறிவியல் கல்லூரியில் நான்காம் ஆண்டு பயிலும் மாணவிகள் தங்களது இறுதி ஆண்டு பாடத்திட்டமான கிராமத்தில் தங்கி வேளாண் பயிற்சி பெறும் திட்டத்தின் கீழ் கபிலர்மலை வட்டாரம் சிறுகிணத்து பாலையம் கிராமத்தில் உள்ள இயற்கை விவசாயம் செய்துவரும் லோகநாதன் அவர்களின் தோட்டத்திற்கு சென்று பார்வை யிட்டனர். இவர் தனது தோட்டத்திலேயே சான பாசி கரைசல் (மண் வளத்தை பெருக்கும்), வாழை பழ கரைசல் (பொட்டாஷ் சத்து நிறைந்தது), சுண்ணாம்பு கரைசல் (கால்சியம் சத்து நிறைந்தது), மீன் அமிலம் (NPK நிறைந்தது) உருவாக்கி விவசாயிகளுக்கு விற்பனை செய்து வருகிறார்.

# Rithvik Pipe

IS 4985 : 2021 | IS 9537

# 25 ஆண்டுகள் உத்தரவாதத்துடன் கிடைக்கும் ரித்விக் PVC பைப்புகள்




## பைப் மட்டும் வாங்காமல் நிம்மதியையும் சேர்த்து வாங்குங்கள்

- **25 ஆண்டுகள் உத்தரவாதம்**
  நம்பிக்கைக்கு அடையாளம்
- **100% LEAD-FREE பைப்புகள்**
  ஆரோக்கியமான தண்ணீர், ஆரோக்கியமான வாழ்க்கை
- **ISI சான்று பெற்ற பைப்புகள்**
  தரத்திற்க்கு ஒரே அடையாளம்
- **ISI பைப்புகள் மட்டும் தயாரிக்கும்**
  நிறுவனம்–தரத்தின் தனிப்பெரும் அடையாளம்
- **67 GRADE மூலப்பொருட்கள்**
  அதிக வலிமை, நீண்ட ஆயுள்
- **TEST CERTIFICATE – QR CODE மூலமாக**
  ஒவ்வொரு பைப்பிலும் நேரடியாக பதிவிறக்கம் செய்துகொள்ளலாம்
- **FREE ON-SITE TESTING**
  விற்பனைக்கு பின் தரம் உங்கள் கண்முன்னே
- **சரியான எடை, தடிமன்**
  ஏமாற்றமில்லா தயாரிப்பு

## PRODUCT RANGES

| ISI PVC PIPE - 20mm to 250mm (All Classes) | ASTM UPVC PIPE - 21mm to 114mm (SCH 40, SCH80) | ISI CONDUIT PIPE - 16mm to 63mm (Light, Medium, Heavy) | ISI PLUMBING PIPE - 25mm to 50mm (15KG) | ISI BOREWELL CASING PIPE - 125mm to 250mm |
|---|---|---|---|---|

**PVC PIPE / UPVC PIPE / CONDUIT PIPE / CPVC PIPE / SOLVENTS / PVC FITTINGS**
**LATERAL HOSE / GARDEN HOSE / SUCTION HOSE / WATER TANK**

## RITHVIK PIPES PROUDLY TRUSTED BY

LMW isha POWERGRID BHEL

**Office**
**Rithvik Pipe Company**, Kannaki Street,
Mahalingapuram, Pollachi, Coimbatore Dist - 642002
E-mail : sales@rithvikpipes.com
Website : rithvikpipe.com

**Factory**
**Rithvik Pipe Company**, Opp.Kamaraj Colony,
R.V.P Pudur, Palakkad Dist - 678555
E-mail : rithvikpipe@gmail.com
Website : rithvikpipe.com

**For Dealership & Projects Enquiries - 96458 77721, 96458 77741**

# இயற்கை மற்றும் உயிர் வேளாண்மை முறை விவசாயியுடன் கலந்துரையாடிய வேளாண் கல்லூரி மாணவிகள்



நாமக்கல், ஜன.29

நாமக்கல் மாவட்டம், மோகனூர் வட்டாரத்தில் பி.ஜி.பி வேளாண் அறிவியல் கல்லூரி மாணவிகள் தங்களின் RAWE (Rural Agricultural Work Experience) கிராம அளவிலான பயிற்சியின் ஒரு பகுதியாக செங்கப்பள்ளி பகுதியில் இயற்கை மற்றும் உயிர் வேளாண்மையில் 12 ஆண்டுகளாக சிறப்பு முயற்சியுடன் ஈடுபட்டு வரும் முன்னோடி விவசாயி வேலுசாமியை சந்தித்து அவரது பார்வதி இயற்கை பண்ணையை விரிவாக பார்வையிட்டனர். நீண்ட காலமாக முழுக்க முழுக்க இயற்கை முறையைப் பின்பற்றி எந்தவித வேதிப்பொருள்களும் பயன்படுத்தாமல் பல்வேறு காய்கறிப் பயிர்களை சுகாதாரமான முறையில் உற்பத்தி செய்து வருவது குறித்து அவர் மாணவிகளுக்கு விரிவான விளக்கங்கள் வழங்கினார். புடலங்காய், பாகற்காய், பூசணி வகைகள், அவரை மற்றும் குறிப்பாக வர்த்தக மதிப்பு உள்ள சிறகுபயறு அல்லது மீன் அவரை என்று அழைக்கப்படும் பயிரை வணிகரீதியில் பயிரிடும் அனுபவத்தைப் பகிர்ந்து கொண்டார். பயறு பயிரின் வளர்ச்சி நிலைகள், அதன் ஊட்டச்சத்து முக்கியத்துவம் மற்றும் சந்தை படுத்துதலில் தேவையான காய்கறிகளின் அளவு மற்றும் லாபகரமான விற்பனை வாய்ப்புகள் போன்ற விபரங்களை அவர் மாணவிகளுக்கு கூறினார். இயற்கை உரங்கள், பூச்சி மேலாண்மைக்கான நாட்டு மருந்துகள், மண்ணின் ஊட்டச்சத்து நிலைத்தன்மையை பராமரிக்கும் பூச்செடி நீராக்கல் நடைமுறைகள் போன்ற அனைத்தையும் அவர் நடைமுறை உதாரணங்களுடன் விளக்கினார். காலநிலை மாற்றத்தின் பாதிப்புகள் அதிகரிக்கும் சூழலில் இயற்கை வேளாண்மை எப்படிப்பட்ட நிலைத்தன்மையைக் கொண்டு வருகிறது, மண் அமைப்பு எவ்வாறு நீண்ட காலத்திற்கு பாதுகாக்கப்படுகிறது, நீர் பயன்பாடு எவ்வாறு குறைக்கப்படுகிறது போன்ற முக்கிய அம்சங்களையும் அவர் கூறினார்.

மேலும், தன்னுடைய உற்பத்திகளை எந்தவித இடைத்தரகர்களும் இன்றி நேரடியாக நுகர்வோரிடம் விற்பனை செய்வது தான் சிறந்த சந்தைப்படுத்தல் முறை என அவர் வலியுறுத்தினார். இந்த நேரடி விற்பனை முறை விவசாயிக்கு அதிக வருமானத்தையும் நுகர்வோர்

நியாயமான விலை மற்றும் தரமான காய்கறிகளையும் வழங்குவதால், இரு தரப்பினருக்கும் பயனுள்ள முறை எனவும் தெரிவித்தார். இயற்கை வேளாண் பொருட்களுக்கு தற்போது நகர்ப்புற மற்றும் கிராமப்புற சந்தைகளில் அதிக வரவேற்பு கிடைப்பதையும், இதை எதிர்காலத்தில் மேலும் விரிவாக்கக்கூடிய வாய்ப்புகள் அதிகம் இருப்பதையும் அவர் மாணவர்களுக்கு எடுத்துரைத்தார்.

இந்தப் பயணத்தின் மூலம் யூபுநிசி பயிற்சி மாணவிகள் இயற்கை வேளாண்மையின் உண்மையான நடைமுறை அனுபவத்தைப் பெற்றதோடு, காய்கறி பயிர்களில் வர்த்தக சாத்தியங்கள், சந்தைப் படுத்தல் திறன்கள் மற்றும் நிலைத்தன்மை சார்ந்த வேளாண் மையின் எதிர்கால முக்கியத்துவம் குறித்து ஆழ்ந்த புரிதலை அடைந்தனர். இதனால் மாணவர்களின் கள அறிவு மேலும் மேம்பட்டு, எதிர்காலத்தில் தாராளமான, விழிப்புணர்வுள்ள, சுற்றுச் சூழல் நட்பு விவசாய முறைகளை ஊக்குவிக்கும் பொறுப்பு உணர்வும் பலப்படுத்தப்பட்டது.

## ஊரக பங்கேற்பு மதிப்பீடு (PRA) நடத்திய வேளாண்மை கல்லூரி மாணவிகள்




நாமக்கல், ஜன.29

நாமக்கல் மாவட்டம், பிஜிபி வேளாண்மை அறிவியல் கல்லூரி மாணவிகள், புதுச்சத்திரம் ஊராட்சி ஒன்றியத்திற்கு உட்பட்ட பிடாரிப்பட்டியில் ஊரக பங்கேற்பு மதிப்பீடு (Participatory Rural Appraisal) நடத்தினர். துணை வேளாண் அலுவலர், அயாஸ் கான் உதவியுடன் மாணவிகள், கிராமத்தில் உள்ள விவசாயிகள் மற்றும் பொதுமக்களை சந்தித்து அவர்களது கருத்துக்களை சேகரித்தனர்.

இதில் விவசாயிகளான அர்ஜுனன், மோகனசுந்தரம், சாந்தி மற்றும் பிற பொதுமக்களும் ஆர்வமுடன் பங்கேற்று தங்கள் கருத்துக்களையும், அனுபவங்களையும், பிரச்சனைகளையும் பகிர்ந்து கொண்டனர். உள்ளூர் மக்களின் உதவியோடு சமூக வரைபடம், பிரச்சனை மரம், நகர்வு வரைபடம்,வள வரைபடம் மற்றும் பை சாட் ஆகியவற்றின் மூலம் சேகரித்த தகவல்களை படமாக காட்சிப்படுத்தினர். ஊரக பங்கேற்பு மதிப்பீடானது விரைவாக தகவல்களை சேகரிக்கவும், கிராமப்புற பிரச்சினைகளை அடையாளம் காணவும், வளர்ச்சி திட்டங்களை வடிவமைக்கவும், வளங்களை மேம்படுத்தவும் உதவுகிறது.

# பவானி வட்டாரத்தில் மல்சிங் (மூடாக்கு) முறையைக் குறித்து விவசாயிகளுக்கு விளக்க நிகழ்ச்சி



ஈரோடு, ஜன.29

ஈரோடு மாவட்டம், பவானி வட்டாரத்தில் உள்ள கிராமத்தில், வாணவராயர் வேளாண் கல்லூரியில் பயிலும் இறுதி ஆண்டு வேளாண்மை மாணவர்கள், தங்களின் RAWE (Rural Agricultural Work Experience) திட்டத்தின் கீழ் விவசாயிகளுக்காக மல்சிங் (Mulching) முறையைப் பற்றி விளக்கக் காட்சி மற்றும் செய்முறை பயிற்சியை நடத்தினர்.

இந்த நிகழ்ச்சியில் மல்சிங் முறையின் அவசியம், அதன் பயன்கள் குறித்து விவசாயிகளுக்கு எடுத்துரைக்கப்பட்டது. மல்சிங் மூலம் மண்ணில் ஈரப்பதம் நீடித்தல், களைகள் கட்டுப் படுத்தப்படுதல், மண்ணின் வெப்பநிலை சமநிலைப்படுத்தப் படுதல், நீர் சேமிப்பு மற்றும் பயிர்களின் மகசூல் அதிகரித்தல் போன்ற நன்மைகள் விளக்கப்பட்டன. மேலும் பிளாஸ்டிக் மல்சிங் மற்றும் இயற்கை மல்சிங் முறைகள் குறித்தும் செயல்முறை விளக்கங்கள் வழங்கப்பட்டன.

இந்த விளக்க நிகழ்ச்சியில் கலந்து கொண்ட விவசாயிகள், மல்சிங் முறையை தங்களின் வயல்களில் பயன்படுத்த ஆர்வம் காட்டினர். மாணவர்களின் இந்த முயற்சியை விவசாயிகள் பாராட்டினர். இந்த விழிப்புணர்வு மற்றும் விளக்க நிகழ்ச்சி மூலம் விவசாயி களுக்கு நவீன வேளாண் தொழில்நுட்பங்கள் குறித்து பயனுள்ள தகவல்கள் கிடைத்தன.



# கோழிப்பண்ணை (Poultry Farming) - ஒரு பார்வை



கோழிப்பண்ணை என்பது முட்டை மற்றும் கோழி இறைச்சி உற்பத்திக்காக கோழிகளை அறிவியல் முறையில் வளர்ப்பதைக் குறிக்கும். இந்தியாவில் வேகமாக வளர்ந்து வரும் கால்நடை வேளாண்மைத் துறைகளில் கோழிப்பண்ணை முக்கிய இடத்தைப் பெற்றுள்ளது. குறைந்த முதலீட்டில் தொடங்கி, குறுகிய காலத்தில் வருமானம் தரக்கூடிய தொழிலாக இருப்பதால் விவசாயிகள், இளைஞர்கள் மற்றும் பெண்கள் அதிகமாக ஈடுபட்டு வருகின்றனர்.

**கோழிப்பண்ணையின் வரலாறு மற்றும் வளர்ச்சி**

முன்னர் கிராமங்களில் வீட்டு அளவில் சில கோழிகளை வளர்ப்பதே வழக்கமாக இருந்தது. காலப்போக்கில் அறிவியல் வளர்ச்சி, தீவன மேம்பாடு மற்றும் மருத்துவ வசதிகள் காரணமாக வணிக ரீதியான கோழிப்பண்ணை வளர்ச்சி அடைந்தது. இன்று சிறிய அளவிலிருந்து பெரிய அளவிலான நவீன பண்ணைகள் வரை கோழிப்பண்ணை பரவலாக காணப்படுகிறது.

**கோழிப்பண்ணையின் முக்கியத்துவம்**

கோழிப்பண்ணை மக்களின் உணவுத் தேவையை பூர்த்தி செய்வதோடு, புரதச் சத்து நிறைந்த உணவுகளை வழங்குகிறது. இது கிராமப்புறங்களில் வேலைவாய்ப்பை உருவாக்கி, விவசாயி களின் பொருளாதார நிலையை உயர்த்துகிறது. நாட்டின் உணவுப் பாதுகாப்பிலும் கோழிப்பண்ணை முக்கிய பங்கு வகிக்கிறது.

**கோழி வகைகள்**

**இறைச்சி கோழிகள்**

இறைச்சி கோழிகள் குறுகிய காலத்தில் அதிக எடை பெறுவதால் இறைச்சிக்காக வளர்க்கப்படுகின்றன. இவை 6–8 வாரங்களில் சந்தைக்கு தயாராகின்றன.

முட்டை கோழிகள்

முட்டை கோழிகள் அதிக முட்டை உற்பத்திக்காக வளர்க்கப்படுகின்றன. சரியான பராமரிப்பில் ஒரு கோழி ஆண்டுக்கு 250—300 முட்டைகள் வரை இடும்.

**நாட்டு கோழிகள்**

நாட்டு கோழிகள் இயற்கை முறையில் வளர்க்கப்படுகின்றன. இவற்றின் இறைச்சி மற்றும் முட்டைகளுக்கு அதிக சந்தை மதிப்பு உள்ளது.

**பண்ணை அமைப்பு**

கோழிப்பண்ணை அமைக்கும் இடம் உயரமான மற்றும் நீர் தேங்காத பகுதியாக இருக்க வேண்டும். நல்ல காற்றோட்டம், போதிய வெளிச்சம் மற்றும் பாதுகாப்பான சூழல் அவசியம். கோழிகளுக்கு தேவையான இடைவெளி வழங்கப்பட வேண்டும்.

**தீவனம் மேலாண்மை**

கோழிகளின் வளர்ச்சிக்கும் உற்பத்திக்கும் தீவனம் முக்கிய பங்கு வகிக்கிறது. மக்காச்சோளம், சோயா அவரை, அரிசி துகள் போன்றவை தீவனமாக பயன்படுகின்றன. வயது மற்றும் வகைக்கு ஏற்ப தீவனம் வழங்க வேண்டும்.

**நீர் மேலாண்மை**

கோழிகளுக்கு எப்போதும் சுத்தமான குடிநீர் கிடைக்க வேண்டும். நீர் பற்றாக்குறை ஏற்பட்டால் முட்டை உற்பத்தி குறையும்.

**நோய் தடுப்பு மற்றும் சுகாதாரம்**

கோழிகளுக்கு நோய்கள் ஏற்படாமல் இருக்க தடுப்பூசிகள் செலுத்தப்பட வேண்டும். பண்ணை சுத்தமாக பராமரிக்கப்பட வேண்டும். நோயுற்ற கோழிகளை உடனடியாக தனிமைப்படுத்த வேண்டும்.

**நவீன கோழிப்பண்ணை முறைகள்**

இன்றைய காலத்தில் தானியங்கி தீவன வழங்கல், வெப்பநிலை கட்டுப்பாடு, செயற்கை ஒளி அமைப்புகள் போன்ற நவீன முறைகள் பயன்படுத்தப்படுகின்றன. இதனால் உற்பத்தி அதிகரிக்கிறது.

**சந்தை மற்றும் விற்பனை**

முட்டை மற்றும் கோழி இறைச்சிக்கு எப்போதும் சந்தையில் தேவை உள்ளது. சரியான சந்தைத் திட்டமிடல் மூலம் அதிக லாபம் பெற முடியும்.

### கோழிப்பண்ணையின் பொருளாதார பயன்கள்

கோழிப்பண்ணை குறுகிய காலத்தில் வருமானம் தரும் தொழிலாகும். இது விவசாயிகளின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துகிறது.

### சுற்றுச்சூழல் மற்றும் கோழிப்பண்ணை

கோழி கழிவுகளை உரமாக மாற்றி விவசாயத்தில் பயன்படுத்தலாம். இதனால் சுற்றுச்சூழல் பாதுகாப்பு கிடைக்கிறது.

### கோழிப்பண்ணையில் எதிர்கொள்ளும் சவால்கள்

நோய்கள், தீவன செலவு அதிகரிப்பு, சந்தை விலை மாற்றம் போன்றவை சவால்களாக உள்ளன. தீர்வுகள் மற்றும் முன்னேற்ற வழிகள் நவீன தொழில் நுட்பங்களை பயன்படுத்துதல், பயிற்சி பெறுதல் மற்றும் சரியான மேலாண்மை மூலம் சவால்களை சமாளிக்கலாம். கோழிப்பண்ணை தொழில் உணவுப் பாதுகாப்புக்கும், பொருளாதார முன்னேற்றத்துக்கும் முக்கிய பங்கு வகிக்கிறது. சரியான அறிவும் மேலாண்மையும் இருந்தால், இது ஒரு நிலையான மற்றும் லாபகரமான தொழிலாக மாறும்.

மேலும் விபரங்களுக்கு, **பா.கீர்த்திகா இளங்கலை வேளாண் மாணவி, முனைவர் பா.குணா, இணைப் பேராசிரியர் மற்றும் துறைத்தலைவர், முனைவர் இர.மகாலட்சுமி, ம.பானுப்பிரியா, குழு மேற்பார்வையாளர்கள், நாளந்தா வேளாண்மைக் கல்லூரி, எம்.ஆர்.பாளையம், திருச்சி. மின்னஞ்சல் : baluguna8789@gmail.com, தொலைபேசி எண் : 99446 41459** ஆகியோரை தொடர்பு கொள்ளலாம்.





வசந்தம் அக்ரிடெக்
VASANTHAM Agri Tech
தலைமை அலுவலகம்: 129/1ஏ2, வண்டியூர் ரிங் ரோடு, சங்கு நகர், மதுரை, தமிழ்நாடு-625020.
கிளைகள்:-மதுரை,சிவகங்கை,திருநெல்வேலி
1 பவர் வீடர் = 40 வேலை ஆட்கள்
இப்போது அரசு மானியத்தில்
40% - பெரிய விவசாயி
50% - பெண்கள் / SC/ST
60% - சிறுகுறு விவசாயி
70% - சிறுகுறு விவசாயி & SC/ST
மானியத்திற்கு விண்ணப்பிக்க தேவையான ஆவணங்கள்
ஆதார்
புகைப்படம்
பட்டா
அடங்கல்
சாதிச் சான்றிதழ் (தகுதி இருந்தால்)
சிறுகுறு விவசாயி சான்றிதழ்
உடனடி மானியம் உள்ள மாவட்டங்கள்
மதுரை
சிவகங்கை
விருதுநகர்
ராம்நாடு
Sarathi i06
Yield max VT 260
Sirachi 8D6
1,22,344 மதிப்புள்ள 9 HP டீசல் பவர் வீடர்,SC மற்றும்
சிறு விவசாயிக்கு 36,703 மட்டுமே
இப்போதே விண்ணப்பியுங்கள் +91 75400 66652

# தென்னை டானிக் பற்றி விழிப்புணர்வு ஏற்படுத்திய வேளாண் கல்லூரி மாணவர்கள்



ஈரோடு, ஜன.29

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தை சேர்ந்த இறுதி ஆண்டு பயிலும் மாணவர்கள், ஊரக வேளாண் பணி அனுபவப் பயிற்சியின் கீழ் பவானிசாகர் பேரூராட்சியில் தங்கி களப்பணியில் ஈடுபட்டு வருகின்றனர். தென்னையின் மகசூலை 20 சதவீதம் வரை உயர்த்தும் தென்னை டானிக் பற்றி கொத்தமங்கலம் பகுதியை சேர்ந்த 15க்கும் மேற்பட்ட விவசாயிகளுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தினர். இலைகளில் பச்சையத்தை அதிகரித்து, ஒளிச்சேர்க்கையைத் தூண்டி, குரும்பைகள் உதிர்வதைக் குறைத்து, காய்களின் எண்ணிக் கையையும், அளவையும் அதிகரித்து, மேலும் பூச்சி, நோய் எதிர்ப்பு சக்தியையும் தருகிறது. இது தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தால் உருவாக்கப்பட்ட ஒரு ஊட்டச்சத்து கரைசல் ஆகும்.இதை ஆறு மாதங்களுக்கு ஒரு முறை வேர் மூலம் கொடுக்க வேண்டும் (ஒரு மரத்திற்கு 200 மி. லி) என இம் மாணவர்கள் விவசாயிகளுக்கு செயல் விளக்கம் அளித்தனர்.

# கிராம வளங்கள் பற்றிய வேளாண் மாணவர்களின் விழிப்புணர்வு



கடலூர், ஜன.27

கடலூர் மாவட்டம், விருத்தாசலம் ஒன்றியம், கோ.பூவனூர் கிராமப் பகுதியில் திருவண்ணாமலை மாவட்டம், வேளாண்மை கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம், வாழவச்சனூர் மாணவிகள் ஊரக வேளாண் பணி அனுபவ திட்டத்தின் கீழ், மாணவிகள் அனைவரும் ஊர் பொது மக்களுடன் இணைந்து பலவிதமான வரைபடங்கள் வரைந்து கிராம வளங்களைப் பற்றி விழிப்புணர்வு ஏற்படுத்தினர்.

இந்த நிகழ்ச்சியானது கிராம மக்களின் உதவியுடன் கோ.பூவனூர் கிராமப் பகுதியில் ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளி முன்பு மாணவிகள் அனைவரும் இணைந்து வரைபடம் வரைந்து கிராம வளங்கள் பற்றியும், பிரச்சினைகள் பற்றியும் விழிப்புணர்வு ஏற்படுத்தினர். இந்நிகழ்ச்சியானது பவர்ராஜன் (பெரு விவசாயி) முன்னிலையில் நடைபெற்றது. இளைஞர்கள், பெண்கள், விவசாயிகள் மற்றும் பள்ளி மாணவர்கள் அனைவரும் இந்த விழிப்புணர்வு நிகழ்ச்சியில் கலந்து கொண்டனர். இந்த விழிப்புணர்வு நிகழ்ச்சியானது அனைத்து பொதுமக்களுக்கும் எளிதில் புரிந்து கொள்ளும் வகையில் சமூக வரைபடம், கிராம வளங்கள் வரைபடம், பிரச்சினைகள் மர வரைபடம், காலக்கோடு வரைபடம், பருவ கால அட்டவணை, தினசரி வேலை வரைபடம் போன்ற பல்வேறு விதமான வரைபடங்கள் மூலம் வேளாண் மாணவிகள் விவசாயப் பெருமக்களுக்கும், பொதுமக்களுக்கும் கிராம வளங்களைப் பற்றியும், பூச்சி மற்றும் நோய்த் தாக்குதலின் அறிகுறிகள் பற்றியும் விழிப்புணர்வு ஏற்படுத்தும் நிகழ்ச்சி நடைபெற்றது.

# அரிசி ஆலையை பார்வையிட்டு பணிகளை அறிந்த வேளாண் கல்லூரி மாணவிகள்

திருவள்ளூர், ஜன.29

திருவள்ளூர் மாவட்டம், ஈக்காடு ஒன்றியத்தில் தொன் பொஸ்கோ வேளாண்மை கல்லூரி மாணவிகள் கிராமப்புற அனுபவப் பயிற்சியை மேற்கொண்டனர்.



ஈக்காட்டில் அமைந்து உள்ள SRKT அரிசி ஆலையை பார்வையிட்டனர். அரிசி ஆலையில் நெல் அரிசியாக மாறும். படிநிலைகள் : சுத்தம் செய்தல், ஊறவைத்தல் அவித்தல், உலர்த்தல். உமி நீக்குதல், அரைத்தல், தரம் திருத்தம் செய்தல் உள்ளிட்ட செயல் முறைகளை நேரடியாக பார்த்து மாணவிகள் கற்றுக் கொண்டனர். மேலும் அத்தொழிற்சாலையில் தயாரிக்கப் படும் அரிசி வகைகள் மற்றும் அரிசியை பொதி செய்தல், வரவு, செலவு, அரிசி தயாரிப்பதில் உள்ள சிரமங்கள் உள்ளிட்ட தகவல்களை தெளிவாக மாணவிகள் தெரிந்து கொண்டனர்.

# விவசாயிகளிடையே விழிப்புணர்வு ஏற்படுத்திய வேளாண் கல்லூரி மாணவர்கள்



நாமக்கல், ஜன.29

நாமக்கல் மாவட்டம், எலச்சிபாளையம் வட்டாரத்திலுள்ள புஞ்சை புதுப்பாளையம் கிராமத்தில், தமிழக அரசின் உழவரைத்தேடி வேளாண்மை திட்டம் வேளாண் துறை மற்றும் உழவர் நலத்துறை சார்பில் சிறப்பாக நடத்தப்பட்டது.

இந்நிகழ்விற்கு வேளாண் துணை இயக்குநர் ஜெயமாலா தலைமை தாங்கினார். நிகழ்வில் வேளாண் அலுவலர் அனிதா, வேளாண் உதவி அலுவலர்கள் பரமசிவம், மதுமதி, நிசாந்த் ஆகியோர் கலந்து கொண்டு, உழவரைத்தேடி வேளாண்மை திட்டத்தின் நோக்கம், செயல்பாடுகள், அதன் மூலம் விவசாயிகளுக்கு கிடைக்கும் பயன்கள் மற்றும் அரசு வழங்கும் மானியத் திட்டங்கள் குறித்து விரிவாக எடுத்துரைத்தனர்.

மேலும், நிகழ்வின் ஒரு பகுதியாக வேளாண் கல்லூரி மாணவர்கள் விவசாயிகளுக்கு நுண்ணூட்டச்சத்துகளின் அவசியம், திரவ உயிர் உரங்கள் (ஸிஷ்ஸூற்ஷ் யஷ்லிக்ஷ்ளஷெமிஷ்யிஷ்குளஷெவி) பயன்படுத்தும் முறைகள் மற்றும் விவசாயிகளுக்கான வேளாண் கால் சென்டர் சேவைகள் குறித்து தெளிவான விளக்கங்களை வழங்கினர்.

இந்நிகழ்வில் திரளான விவசாயிகள் கலந்து கொண்டு, தங்களுக்குள்ள சந்தேகங்களை நேரடியாக அதிகாரிகளிடம் கேட்டறிந்து பயனடைந்தனர். இத்தகைய திட்டங்கள் மூலம் விவசாயிகளின் உற்பத்தித் திறன் மேம்படுவதுடன், அரசு நலத்திட்டங்கள் அவர்களிடம் நேரடியாக சென்று சேர்வதற்கும் வழிவகுக்கின்றன.